308

# ஆத்திசூடி

# கதையும் பாட்டும்.

E. கோவிந்தஸாமி
S. விருத்தாசல ஐய

இவர்கள் எழுதியது.

OFFICE OF THE REGISTRAR
OCT

மதுரை, புஸ்தக வியாபார
இ. மா. கோபாலகிருஷ்ணக்
வெளியிட்டது.

1298 [வி

TB
O-1,33
N28
184439

# ஆத்திச்சூடி

# கதையும் பாட்டும்.

---

**E. கோவிந்தஸாமி ர**[illegible]

**S. விருத்தாசல ஐயர்**

இவர்கள் எழுதியது.

மதுரை, புஸ்தக வியாபாரம்,

**இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்**

வெளியிட்டது.

ரிஜிஸ்தர் செய்தது.] **1928.** [வி[illegible]

Title & Contents Printed at the
EXCELSIOR PRESS,
MADURA.

TB
3X
O7w8
24439

# முகவுரை.

---

கதையோடு பாட்டும் கருதிப் படித்தல்
விதையறிவுக் கென்றுணர்ந்தார் மேலோர்—இதைப்பஞ்ச
தந்திரமாங் காதை தனிலறிவோம் மாணவர்க்கே
இந்தநூல் வந்த திவண்.

"ஆத்திச்சூடி கதையும் பாட்டும்" என்கிற இச்சிறு புத்தகம் மாணவர்கள் ஆரம்பத்தில் அத்யாவசியமாகப் படித்தறியவேண்டிய முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ள அவ்வையாரது பதினாறு வாக்கியங்களையும் அவ்வாக்கியங்களின் கருத்துக்கள் ஆரம்ப பாட்சாலைச் சிறுவர்கள் சிறுமிகள் மனது ஊன்றிப் படித்தறியுமாறு அமைந்துள்ள பதினாறு நீதிக்கதைகளையும் பிள்ளைகள் அக்கதைகளைத் தெள்ளிதின் படித்துணரத் தக்க ஒள்ளிய தமிழ்ச் சொற்களமைந்த பதினாறு சங்கீதப் பாட்டுக்களையும் காரலேஷன் போதன முறையின் விதியை அனுசரித்து அமைந்துளது.

சிறுவர்களும் சிறுமிகளும் இதனை அதிக ஆவலுடன் தாங்களே விரும்பிப் படித்தறியத்தக்க நூதன முறையில் இது அமைந்துள்ளபடியால் போதகாசிரியர் அனைவரும் இப்புத்தகத்தைத் தத்தம் கலாசாலைகளில்பாடமாக வைத்து ஆதரிப்பார்களென்பது எமது துணிபு.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு

தமிழ் வித்வ

# பொருளடக்கம்.


| எண். | விஷயம்: | பக்கம். |
|---|---|---|
| 1. | தருமமே மேன்மை தரும் ... | 1 |
| 2. | கோபம் கூடாதென்பது .. ... | 3 |
| 3. | இயன்றதை இல்லை என்று தளித்தல் ... | 4 |
| 4. | தருமத்தைத் தடுக்கலாகா தென்பது ... | 6 |
| 5. | இரகசியம் வெளிப்படுத்த லாகாதென்பது | 8 |
| 6. | தைரியமே தக்கதுணை யென்பது ... | 9 |
| 7. | படிப்பே மேன்மை பயக்கு மென்பது .. | 12 |
| 8. | யாசித்தல் இகழ்ச்சி தரும் என்பது ... | 13 |
| 9. | அன்னதானம் மேலான தென்பது ... | 15 |
| 10. | பொறாமைப் படக் கூடாதென்பது ... | 16 |
| 11. | இயல் பலாததைச் செய்யலாகா தென்பது | 18 |
| 12. | கபட வார்த்தை பேசக்கூடாதென்பது | 19 |
| 13. | அதிக நித்திரை யாகா தென்பது ... | 21 |
| 14. | கீழ்மக்கள் கேண்மை கெடுதி பயக்கு மென்பது ... | 22 |
| 15. | கெடுதியை ஒழித்தலே கீர்த்தியைப் பயக்கு மென்பது .. | 24 |
| 16. | சூது ஆடலாகா தென்பது ... | 26 |

# ஆத்திச்சூடி

# கதையும் பாட்டும்.

## 1. தருமமே மேன்மை தரும்.

ஒரு தவசி பிரபு ஒருவரைக் கண்டார். அவரைக் கண்டதும் பிரபு வணங்கி தம் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். தவசி பிரபுவின் வீட்டிற்குச் சென்றதும் அவரது தன்மையையும் செல்வத்தையும் பார்த்து, 'அப்பா, உன்னிடத்தில் மிகுந்த செல்வம் இருக்கிறது. அதற்கேற்றபடி தருமத்தைச் செய்தால், நீ எல்லோரிலும் மிகுந்த மேன்மை பெற்றவனுவாய்' என்று கூறிச் சென்ருர். பிரபுவும் அப்படியே செய்து வந்தார்.

அவர் வீட்டில் நால்வர் திருடச் சென்... கள். சென்று வழிப்போக்கர்களைப் போல்... கள் படுத்திருக்கும் பொழுது, நள்ளிரவி... ஒரு விளக்குடன் வெளியே வந்தார். ...

ஆங்கு படுத்திருந்த கள்வரைப் பார்த்து, 'நீங்கள் யாவர்? என் திண்ணையில் பசியோடு படுத்தல் கூடாது' என்று கூறி வீட்டினுள் அழைத்துச் சென்று, பாலன்னம் அளித்து உபசரித்தார். உடனே அந் நால்வரும் தாம் நினைத்த கெட்ட எண்ணத்தைக் கூடாதென ஒழித்து, தருமவானுக் கிடர்செய்தல் தகாதெனக் கருதிச் சென்றார்கள். ஆதலால், அறஞ்செய விரும்பு.

கல்லார்க்கும் கற்றவர்க்கும்—என்னும் மெட்டு.

தருமந்தான் உலகினுக்குத் தலையாகும். செய்தால்
கருமந்தான் நீங்கி ஈசன் கழலை அடைவாரே.
ஆதலினால் தர்மமதை அன்புடனே இன்றே
காதலினால் செய்தல் உந்தன் கடனென்றுமே சொல்ல,
அப்படியே உறுதி கொண்டு அறமிழைக்க, ஓர்நாள்
மைப்படிந்த மனமுடையார் வந்தார் நால்வர் திருடர்;
படுத்திருந்தார் திண்ணைதனில் பாட்டைசாரி போலே.
எடுத்தகையும் விளக்குமாக இரவில் வெளிவந்தார்.
அய்யா நீங்கள் யாரோ இங்கரும் பசியால் நொந்து
நையா விளைப்புடனே வந்தீர் நள்ளிருளில்; நீர்தான்
உண்டிடவே வேண்டு மென்று உபசாரம் பேசி
கண்டு பழம் பாலன்னமும் கனிவுடனே இட்டார்.
திருட வந்த நால்வருக்கும் திடுக்கென் றெண்ணம்மாறி
திருடரு நற்சிந்தையராய் அகன்றாரே அப்பொழுதே.
அறஞ்செய விரும்பு எனும் ஆத்திச் சூடி நீதி
அளித்த பலன் மைந்தர்களே உணரும்.

## 2. கோபம் கூடாதென்பது.

பிராமண ரிஷி ஒருவர் தம் மனைவியின் மீது ஒருநாள் மிகுந்த கோபம் கொண்டனர். அப்பொழுது அவர் தன் பிள்ளையைப் பார்த்து, 'உன் தாய் குற்றம் செய்தாள். ஆதலால் நீ அவளை வெட்டி விடவேண்டும்' என்று கூறிவிட்டு வெளியே போய்விட்டார். இக்கொடுங் கட்டளையைக் கேட்ட மைந்தன், 'நான் என்ன செய்வேன்? தகப்பன் சொல்லைத் தள்ளுவதா? தாயைக் கொலை செய்வதா?' என்று வியாகுலத்துடன் ஒன்றும் தோன்றாதவனாய் சிந்தையில் ஆழ்ந்தனன். வெளியே சென்ற பிதா பின்பு கோபம் ஆறி மனம் தளர்ந்து, 'ஆ, என் செய்தோம் கொடுஞ் சினத்தால்? கொலையைச் செய்யக் கூறினோமே? மனைவியை இழந்தவனாயினனே? இந்நேரம் மைந்தன் என் செய்தானோ?' என்று அதிக விரைவுடன் வீட்டில் வந்து பார்த்தார். அங்கே மனைவியும் மகனும் இவர் முன் வந்து வணங்கினர். அதைக் கண்ட முனிவர் அகமகிழ்வுடன் இருவரையும் கட்டித் தழுவி, 'கோபம் பொல்லாது. அது பாவத்திற் சேர்ப்பிக்கும். ஆத
அதை முழுதும் விடவேண்டும்' என்று
னம் செய்துகொண்டார். ஆதலால்,
சினம்.

தந்தின தன தனனு—என்னும் நொண்டிச்சிந்து மெட்டு

பிராமண ரொருவருண்டு; அவர்தம்
பெண்சாதியின்மேற் கோபங் கொண்டு,
பிள்ளையைத் தான் கூவி உன்னைப்
பெற்றவளை இப்பொழுதே ஆவி
அகன்றிட வெட்டிடவே வேண்டுமென்
றருஞ்சினக் கட்டளை யிட்டிடவே,
மைந்தனும் மனம் வருந்தி ஈதென்
மறுத்துரை செய்வதுவோ; பொருந்தி
தாய் உயிர் வாங்குவதோ? இவ்விரண்டும்
தரும்பழி தன்னைத் தாங்குவதோ?
என்றங் குளம் வருந்தசென்ற
ஈன்றோன் மனமும் சினந்திருந்த
திடுக்கென்றில் புக்க அங்கே
தேவியும் மகனும் முன்னிற்க,
ஆதர வொடுசிறந்து நானும்
ஆறுவது சினமென்றதை மறந்து
கூறியதே குற்றம். நீயும்
குறித்தமர்ந் திருந்ததுவே கொற்றம்
என்றே மனங் குளிர்ந்தார் யாரும்
இதைப்போல் நடந்தால் மனம் தெளிந்தார்.

## 3. இயன்றதை இல்லை என்னு தளித்தல்.

துரியோதனன் என்னும் அரசனிடத்தில் ...ண ரொருவர் சென்று, 'நான் செய்யும் யாகத் ... வேண்டிய விறகு தருகிறாயா?' என்று கேட் ...ன் சம்மதித்து, 'வேண்டும்போது பெற்

றுக்கொள்' என்று விடைகூறி அனுப்பினன். சில நாட் கழித்து பிராமணர் சென்று விறகைக் கேட்க, அதற்கு அரசன், 'ஒருவாரமாய் விடாமழை பெய்வதால், தற்காலம் ஊரில் எங்கும் விறகு இல்லை; என்னிடத்திலும் விறகு இல்லை' என்று கூறிவிட்டான். பிராமணர் மனவருத்தத்துடன் திருப்பினர். அப்படி அவர் திரும்பிப்போவதை கருணன் என்னும் அரசன் கண்டான்; 'என்ன சமாசாரம்' என்று விசாரித்தான்; உடனே தன் வீட்டின் பின் கட்டைப் பிரித்துத் தள்ளி, வேண்டிய விறகை எடுத்துக் கொண்டு போகும்படி அளித்தான். இதைக் கண்ட துரியோதனன் அவமானம் அடைந்தான். கருணன் பெரும் புகழ் பெற்றான். ஆதலின் இயல்வது கரவேல்.

தந்தம் தந்தம் தன தனன.—என்னும் மெட்டு.

யாகம் செய்யும் மனதுடனே
அந்தண ரொருவர் மகிழ்வுடனே
அரசன் துரியோதனனிடமே
அடைந்தே கேட்டார் விறகுடனே.
தருவேன் வேண்டும் போதென்றார்;
சரியென்றவரும் தான் சென்றார்;
பொறுத்தார்; பின்பு சிலநாளில்
போய்க் கொடு வென்றார்; மழைநாளில்
வந்தனை விறகில்லை என்றிடவே, அவர்

சிந்தனை மாறித் திரும்பிடவே,
அரசன் கருணன் கண்டானே ;
அன்புட னிரக்கம் கொண்டானே;
தருவேன் விறகெனச் சரியென்றார்;
தன் வீட்டிற் பாதி பிரியென்றார் ;
கொள்ளும் கொள்ளுமென் றளித்தாரே;
அவருள்ளும் புறம்பும் களித்தாரே.
இயல்வது கரவே லெனுநீதி
என்றும் மறவாதது கியாதி.

## 4. தருமத்தைத் தடுக்கலாகா தென்பது.

மாபலி என்னும் ஒரு அசுரன் மிக வும் சிறந்த ஒரு யாகத்தைச் செய்யக் கருதினான். யாகம் செய்யும் பொழுது தானம் செய்வது வழக்கமாதலால், சக்கரவர்த்தியாகிய அசுரன் யாசகர்களுக்கு வேண்டிய பொருள்களை அளித்த னன். அப்போது மிகக் குறுகிய வடிவமுடைய வாமனர் என்னும் பிராமணர் ஒருவர், 'எனது காலால் மூன்றடி மண் எனக்குத் தானம் வேண் டும்' என்று கேட்டார். பலி சக்கரவர்த்தி அவ் வாறே கொடுக்கச் சம்மதித்தான். அருகில் இருந்த சுக்கிரன் என்ற அசுர குருவானவர் அரச னைத் தடுத்தார். அங்கு யாசித்து வந்தவர் விஷ்ணு. ... லியின் காரியத்தைத் தடுப்பதற்கு வந்தவராத ... கருத்தை அறிந்த ஆசிரியர் வேண்டா

மென்ருர். அவ்வுண்மையை அறியாத மன்னவன் பிராயணர் கேட்டவாறே மூன்றடி மண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்கச் சென்றனன். அப்போது அருகில் இருந்த குரு ஈ யுருவமெடுத்து, கெண்டிகையின் நீர் வெளிப்படா வண்ணம் அதனுட் புகுந்து, அதன் வாயிலை அடைத்தார். அவ்வாறு அடைத்திருப்பதை வாமனர் ஒரு தருப்பையால் குத்தினுர். அது ஈயின் கண்ணில் பட்டது. ஈ யுருவெடுத்த குரு கண்ணிழந்தவராயினர். அது தருமத்தைத் தடுத்தலினுலன்ரோ? ஆதலால், ஈவது விலக்கேல்.

மையாடிய கண்டன் மலைமகள்—என்னும் மெட்டு.

இறைவர் களுக்கிறைவ னென இருந்தான் பலி என்பான்.
முறைசெய் துலகொடு வாழுநாள் முயன்ருன் றனி யாகம்.
பறை பெய்தன னறமீகுவான் பலிகொள் குறளுருவாய்
நறை பூசுர னெனவே திருமகள் நாயகன் வந்தான்;
வாமன வடிவங் கொடு வந்தான் பலி மண் மூன்
ருமன தெனெண்ண மருளுண்டேல் தாருமென்ன,
பூமன வனன்றென புகழ்ந்தீயுமுன் கொள்வோன்
மாமன முணர்ந்த மறையான் குரு மறுத்தான்.
மறுத்து முணர்ந்திலனுய்த் தாரை வார்க்கக் கலமெடுத்தான்.
நிறுத்த நீரைக் குருவீ யுரு நிலைமையொடு தடுத்தான்;
கறுத்து கைப்புல்லாற் குத்திட கண்ணென்று அந்தகனுய்
வருத்த முளனுன் மைந்தீர் மறந்து மீதல் வில

## 5. இரகசியத்தை வெளிப்படுத்த லாகாதென்பது.

மிகக் கொடியவனும் இலங்கைக் கரசனு மான இராவணன் என்னும் ஓர் அசுரன் இருந் தான். அவன் வனவாசமாய் வந்திருந்த ராமன் மனைவியைத் தூக்கிக்கொண்டு ஓடினான். ஓடும் பொழுது ஜடாயு என்னும் கழுகரசன் இராவண னைத் தடுத்தான்; சீதையை விட்டுவிடும்படி எவ்வள வோ நற்புத்தி புகட்டினான். ஆயினும் கேளாதவ னாய், இராவணன் இரதத்தைச் செலுத்தக் கண்ட ஜடாயு, கோபித்து அவனுடன் யுத்தம் செய்யத் தொடங்கினான். அப்படி ஒருவரோ டொருவர் தோல்வி யில்லாது நெடுநேரம் யுத்தம் செய்த தால், இராமன் வந்து விடுவான் என்று இராவ ணன் பயந்தான். சற்று நேரம் சண்டை செய்வ தை விட்டு அவன் அக்கழுகரசனிடம் சில .இன் னுரையாடி, அவனுடைய உயிர்நிலையை அறிந் துகொண்டான்; உடனே அவனுடைய சிறகுகளை அறுத்துப் பூமியில் வீழ்த்திவிட்டுச் சீதையைக் கவர்ந்து சென்றான். பகைவனுக்குத் தன் உயிர் நிலையின் உண்மையைக் கூறியதனால், ஜடாயு உயிர் துறக்கலானான். ஆதலால், உடையது விளம்பேல்.

மலடி வயிற்று—என்னும் மெட்டு.

ராவணன் என்றோர் ராக்ஷதனே லங்கை
-கர்க்கிறையாய துன்மார்க்கதனே; ராமர்
ப விரும்பிய பாதகனே; முனம் வனந்தேடி

சீதையைத் தூக்கிச் சென்றனனே ; செலும்
ஓதையைக் கேட்டன ருத்தமனே; உடன் [தானே;
பாதையை மறித்துயிர் பதைத்தனனே; அவர் ஜடாயு
விடு விடு பாதக படு பாவி; க்ஷணம்
படு படு மிதுததி நின தாவி; என்றும்
கடு கடுத் துடன் ரதந்தான் மேவி செலுத்தினன் தானே;
கண்டுமே கழுகிறை கதித்தாரே; மனம்
விண்டுமே உயிர்ப்புட னடித்தாரே; ரதந்
துண்டு துண்டாகிட அழித்தாரே ; அசுரன்தானே
காலங் கழிவதெனக் கருதானொரு
சாலங் கருதி மனந் திருகா னுரை
யாலங் கவருயிர் நிலையறியா னொடி கொன்றானே.
உடையது விளம்பே லெனும் சொல்லை உணர்
உடையவாராய்க் கொளினீர் தொல்லை என்றும்
உடையவராகீர் மிக நல்லை மைந்தீர் கேளீரே.

## 6. தைரியமே தக்க துணை யென்பது.

பிரம்மரிஷி யென்று பெரும்புகழ் வாய்ந்த வசிட்டமுனி தவஞ்செய்து ஒருவனத்தில் வசித்து வந்தனர். அவ்வனத்திற்கு வேட்டையாடுவதற் காக கோசிக மன்னன் வந்தனன். அரசன் வேட்டையாடிக் களைத்து வந்தனன் என்று கண்டனர் வசிட்ட முனிவர்; எவர் எதை விரும்பினும் அவரவர் விரும்பியவாறே அளிக்கும் காமதேனு என்னும் அதிசயப் பசுவை உடனே அழைத்தனர். அரசனுக்கும் அவனது சுற்றத்தார்க்கும் [illegible] தளிக்குமாறு அவர் அதற்குக் [illegible]

டார். அப்பசுவும் அவரது கட்டளையை சிர மேற்கொண்டு விருந்தளிக்க, அரசன் உண்டு இளைப்பாறினன். பின்பு அப்பசுவின் மீது விருப் பங் கொண்டவனாய் அதைத் தனக்குக் கொடுக்கும் படி அவன் முனிவரைக் கேட்டான். முனிவர் மறுத்ததைக் கண்ட அரசன் சினங்கொண்டு, தானே அப்பசுவை வலிந்து பற்றினான்; பசு வாராததால், யுத்தம் செய்து தோல்வி அடைந் தான். பிறகு அரசன், 'நானும் தவம் செய்து பிரம்மரிஷி ஆவேன். அப்போது காமதேனு என் கட்டளையையும் ஏற்றுக் கொள்ளும்' என்று கருத்துட் கொண்டான். எண்ணியவாறே அவன் அரசைத் துறந்து, காட்டிற் புகுந்து அருந் தவம் செய்யலுற்றான். அதை அறிந்த தேவேந் திரன் அத்தவத்தைக் கெடுக்க முயன்றான். அதற்கு எள்ளளவேனும் மனம் சோராமல் பெருந் தவம்செய்து பிரம்மரிஷி என்னும் பதவி யைப்பெற்றான். 'ஆதலால், ஊக்கமது கைவிடேல்.

கோம்மிப் பாட்டு—தனனன னனனன நானனே—மெட்டு.

காமதேனு என்பதொன்று முண்டதற்குக் கருதிய
தளிக்கும் வன்மையுண்டு.
நாமம் வசிட்டரென்னு முனிவர்க்கு நன்னயமாய்ப் பணி
செய்வதுண்டு.
கோசிகனென்னு மரசனுண்டு; அவன் குறகினன்
வேட்டையாடப் பண்டு.

வாசி யடக்கும் வசிட்டமுனிவனை வந்து வலஞ்செய்து
கண்டதுண்டு.

அரசனும் வேட்டையங்காடிக் களைத்து அடைந்தனன்
நம்மிட மென்று சொல்லி,

பரவிய மன்னர்க்குப் போனகம் யாவும் படையெனவே,
காமதேனுவுந்தான்

சர்க்கரை முக்கனி யட்டில்புகாமலே சாதம் விரும்புங்
கறிக ளெல்லாம்

அக்கணமிட்டது; உண்டிளைப்பாறி அரசனும் அங்ஙன
மேது சொல்வான்.

இக்காமதேனு எனக்கு உரியதாய் ஈந்திட வென்ன வவர்
மறுக்க,

புக்கனன்பற்றி வலித்தும் வாராததால் புங்கவனுய்த்தவஞ்
செய்வதற்கு

துறவிக்கு வேந்தன் தரும்பெனவே புவி சொல்லும்
வசனமும் நிச்சயமே.

பிறவிப் புவிதன்னில் பிரம்மரிஷிப் பட்டப்பேறென்று
மெய்த்தவஞ் செய்யலுற்றான்.

இந்திரனாலுமிடையூறு புக்கதேதுக்கும் மனஞ்சலியானாய்,
பந்தமறத் தவஞ்செய்து பிரம்மரிஷிப் பட்டமடைந்தான்;
கேள் பாலர்களே.

ஊக்கமது கைவிடேலெனுநீதி யுரைப்படியே மனஞ்சற்
றேனும்

ஏக்கமதின்றி முயற்சிசெய்தால் யாவும் எளிதில் முடி
திடும் பாலர்களே.

தமிழ்நாடு ... 18

## 7. படிப்பே மேன்மை பயக்கு மென்பது.

கொங்கணம் என்னும் தேசத்து அரசனுக்கு ஊன்மத்தன் என்று ஒரு புத்திரன் இருந்தான். அவன் இளமைப் பருவத்திலே தன் பிதாவினால் பாடசாலைக்கு அனுப்பப்பட்டுக் கல்வி பயின்றான். ஆயினும் படிப்பை இகழ்ந்தவனாய், கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதிலேயே அவன் காலம் கழித்து வந்தனன். பின்பு அரசன் இறந்ததும் ஊன்மத்தன் அரசன் ஆயினன். அவனுக்கு எழுதவாயினும் படிக்கவாயினும் தெரியாது. வீண் பொழுது போக்குவதிலேயே பிரியமுடையோனாய் தேசத்தை ஆளுவதில் ஊக்கம் இல்லாதவ னாயினன். சரியான விசாரணை நாட்டில் இல்லாததால், உத்தியோகத்திலுள்ளோர் தம் மனம் போனவாறு நடந்து வந்தனர். அப்பொழுது தேசத்தில் உண்டாகிய கலகத்தை அடக்க அரசனால் முடியவில்லை. இதைக் கேள்விப்பட்ட அடுத்த தேசத்து அரசன் படையெடுத்து வந்து ஊன்மத்தனைக் கொன்று, நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். ஆதலால், எண்ணெழுத் திகழேல்.

வாழ்க வாழ்கவே—என்னும் மெட்டு.

கொங்கண தேசமொன்று ; இந்தக் குவலயத்திலே அதிற்
றங்கிடும் மன்னனுக்கோ தக்க ஓர் பிள்ளையுண்டு.
...ன்மத்த னவனே கல்வி உணர்ந்திடாவனே ; எண்ணும்

எழுத்துமி ரண்டும் கல்லா இயல் புடையவனே.
தந்தைக்குப் பின்னவனே பட்டம் தரித்திட உடனே,
மந்திரி மற்றோரும் நெறி மாறி நடந்தாரே.
குடிகள் எல்லோரும் துன்பம் கொண்டாரே; நாட்டில்
கலகமுண்டாகி மிகவும் கஷ்டப்பட்டாரே.
அறிவில்லாததால் நாட்டை அடக்கும் வலிமைதான்
சிறிது மில்லாமல் பணம் சேர்தலில்லாமல்
இருப்பதைத் தெரிந்து வேறோரசனும் முனைந்து,
படையெடுத்து வந்து அரசைப் பற்றினன் தானே.
என்பதைத் தானுணர்ந்து நீங்கள் எண்ணெழுத்திகழேல்
எனும் உத்தம நீதிதனை நீங்கள் உணர்ந்திடுவீரே.

## 8. யாசித்தல் இகழ்ச்சி தரும் என்பது.

துரோணசாரியர் சிறுவயதில் வில்வித்தை கற்றுக்கொண்டனர். அப்பொழுது அவருடன் துருபதன் என்னும் அரசகுமாரனும் விற்பயிற்சி செய்தனன். அவர்கள் இருவரும் பிரியாச் சிநேகிதர்களாய் இருந்தனர். அரசகுமாரனுக்கு வேண்டிய உதவிகளை துரோணர் செய்து வந்தார். அதனால் சந்தோஷம் அடைந்த துருபதன், 'நான் அரசனானபின் உனக்கு எனது பாதி நாட்டைத் தருவேன்' என்று கூறினான். வித்தை கற்று முடிந்து அவரவர் தம் இடம் சென்றார்கள். சிலகாலம் சென்றபின் துரோணருக்கு ஒரு பசு வேண்டியிருந்தது. முன்பு துருபதர் கூறியதின் ஞா
அவருக்கு வந்தது. உடனே துரோணர்

டம் சென்று பசு வேண்டுமெனக் கேட்டார். அவர் கேட்டதைக் காதில் ஏற்காமல் துருபதன் தற்பெருமையாய் இருந்தான். தான் செய்த நன்றியை மறந்ததைக் கண்ட துரோணர் மிகவும் வருத்தப்பட்டார். எவரிடத்தும் தா என்று கேட்டல் கூடாது என்று தமக்குள்ளே நிச்சயித்துக் கொண்டார். ஆதலால், ஏற்பதிகழ்ச்சி.

முத்திநெறி யறியாத—என்னும் மெட்டு.

துரோணருந்தான் சிறுவயதில் துருபதனோடுடன் பயின்றார்.
ஆரணமாம் தனுவித்தை அன்புடனே நட்பாக
அரசன் மகன் மனங்களிக்க அடிக்கடி தான் கற்றதெல்லாம்
திடமுடனே சொல்லி வைத்தார். சிறப்புள்ள துரோணருமே
தனக்கேற்ற உதவி செய்த சந்தோஷத்தால் ராஜன்,
எனக்கே நன் முடிதரும் பின் ஈவேன் நான் பாதியென்றான்.
அவ்வித்தை முடிந்ததன்பின் அவரவர் தம்மிடம் போக,
செவ்விய ஓர் பசுவேண்டி தேடியே துருபதனை
சென்றுமே அரசனிடம் சிறப்புடன் ஓர் பசுகேட்க,
ஒன்றுமே உரையாமல் உயருதவி நினையாமல்,
பெருமைபொடு வீற்றிருக்க பேசாமல் துரோணருமே
அருமைமிகு நட்பெனினும் அன்புடனே அவரிடம் போய்,
...கிகழ்ச்சி என்றே எண்ணித் தம்மிடம் போனார்.
... நீரின்னீதி கருத்துடனே மைந்தர்களே.

## 9. அன்னதானம் மேலானதென்பது.

பிராமணச் சிறுவன் ஒருவன் ஒரு காட்டின் வழியே பிரயாணம் செய்கையில் பொழுது போய் விட்டது. அவன் வழி தெரியாமல் வருந்துவதைக் கண்ட ஒரு வேடன், தான் குடியிருக்கும் பரணுக்கு அவனை அழைத்துக்கொண்டு போனான். 'நாம் தின்னும் தினைமாவில் இவனுக்கும் பங்கு கொடுப்போம்' என்று வேடன் தன் மனைவியிடம் சொன்னான். அவள் அதற்குச் சம்மதிக்காததால், வேடன் தன் பங்கில் கொஞ்சம் கொடுத்து அவன் பசியைத்தணித்தனன். பின்பு மூவரும் ஆங்குள்ள பரணியில் நித்திரை செய்தனர். அப்பரணியில் இடம் போதாததால், வேடன் தவறிக் கீழேவிழ, அவனை ஒரு புலி கொன்று தின்றுவிட்டது. இதைக்கண்ட பிராமணச் சிறுவன் மிகவும் பயந்து, 'என்ன ஆச்சரியம்! அன்னதானத்தின் பலனா இது?' என்று துக்கித்தான். இவ்வாறு ஒரு வருஷம் அலைந்து அவன் ஒரு ரிஷியைக் கண்டு காரணம் கேட்டனன். அதற்கு அவர், 'அரசன் வீட்டில் பிறக்கப் போகிற ஆண் குழந்தையை வெள்ளித் தட்டில் ஏந்தி விசாரித்தால் தெரியும்' என்றனர். பிராமணன் அப்படியே செய்ய, வேடனே அக்குழந்தை என்றும், வேடனின் மனைவி பன்றி வயிற்றில் பிறப்பதாகவும் தெரி கொண்டான். ஆதலால், ஐயமிட்டுண்.

என் சாவல்—என்னும் மெட்டு.

ஒரு சிறுவன் காட்டினிலே ஒண்டியாகத்தானும்
வரும்பொழுது பொழுதுபோக வழியும் தடுமாறி,
கலங்குவதைக் கண்டோர் வேடன் காதலுடன் இரங்கி,
நலங்கிளர்தன் குடிசைக்கேதான் நடத்திக்கொண்டு போனன்.
'பட்டினியாய் இருப்பதனல் பையனுக்கும் தினமா
இட்டிடுவோம்' என்னமனைவி இசையவில்லை. வேடன்
தன்பங்கில் கொஞ்சமிட்டு தானுங் கொஞ்சமுண்டு,
இன்பமுடன் ராத்திரிக்கே ஏறிப் பரண்மீதே
தூங்கும்போது, தவறிவேடன் தொப்பென்று கீழ்விழவே,
தீங்குசெயும்புலி யொன்றவனைத் தின்றுமே சென்றதுவே.
கண்டானே பிராமணனும் கலங்கி அன்னதானம்
கொண்டானே இவனுக்கு மிக்குறைவு வரலாமோ
என்று முனி யொருவரைத் தானியல்புடனே கேட்க,
'நன்று ராஜன் மனைவிக்கே ஓர் நலமிகும் ஆண்குழந்தை [றுர்.
பிறக்கும்; அதனை வெள்ளித்தட்டில் பிடித்துக் கேள்போ' என்
அப்படியே செய்யச் சிறுவன் அறிந்தானே: 'அவ்வேடன்
இக்குமாரனுப்ப் பிறந்தான் என்று மவன் மனைவி
தப்புரிய பன்றியாகத்தான் பிறந்தாள்' என்றும்.
ஆதலினல் ஐயமிட்டுண் என்று ஆத்திச்சூடி
காதலினல் கூறும் நீதி கருத்தினில் வைப்பீரே.

## 10. பொறுமைப் படக் கூடாதென்பது.

தேவேந்திரன் முன்னொரு காலத்தில் தன் சபையோர்களுடன் கொலுவிருந்தனன். அப்பொழுது ஆங்குள்ளோர்களை நோக்கி, 'பூலோகத் ... பொய் சொல்லாத அரசர்களுண்டோ' என்று ...டனன். அங்கிருந்த வசிட்டர் 'என் சீட

னும் அயோத்தியின் அரசனுமாகிய அரிச்சந்திரன் சத்தியம் தவருன்' என்று கூறினுர். இவரது வார்த்தையைக் கேட்டனர் விசுவாமித்திரர்; அவர் சொல்லியதில் பொருமை கொண்டவராய், 'அரிச்சந்திரன் பொய்யன்; நான் அதை மெய்ப்பிக்கிறேன்; இதற்கு நான் செய்த தவத்தில் பாதியைப் பந்தயம் வைக்கிறேன்' என்று கூறினர். பின்பு அவர் உலகிற்கு வந்து அயோத்தியை அடைந்து, அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படியாய் எவ்வளவோ கஷ்டப்படுத்தினுர். அதனுல் அரிச்சந்திரன் நாட்டை இழந்து, மனைவி மக்களை விற்றுத் தானும் சுடுகாட்டைக் காத்தனன். ஆயினும் அவன் சத்தியத்தை விடாமற் காப்பாற்றினுன். விசுவாமித்திரர் தோல்வியும் அவமானமும் அடைந்தார்; தவத்தில் பாதி இழந்தார். ஆதலால், **ஔவியம் பேசேல்.**

கையறவிலாதுநடு—என்னும் மெட்டு.

பொய் சொல்லா மன்னனுண்டோ பூலோகந்தன்னில்
அய்யா உரையுமென்று அவையி லிருந்தோரை
மெய்யாய்த் தேவேந்திரனும் வினவிடவே, வசிட்டர்,
'அயோத்தி ஆளும் அரிச்சந்திரன் எந்தன் சீடன்;
கனவிலுமே பொய்யுரையான்' என்றே பதில் கழற,
மனதில் பொருமை கொண்டு மறுத்தார் கோசிகரே.
'பொய் சொல்லா னரிச்சந்திரன்' என்பதுண்மையானுல், நான்
செய்தவந் தான் பாதி யீவேன்' என்றே திரும்பினரே.
உலகினிலே வந்து அரிச்சந்திரனிடம் சென்று, அவ

அலகில்லா துன்பமெல்லாம் அடைந்திடச் செய்தாரே.
தேசம்விட்டான்; மக்கள்மனை சேரயாவும் விட்டான்;
காசிதன்னில் தானும் சுடுகாடு கார்க்கலானான்.
செப்பரிய துன்பம் தன்னைச் சேர்ந்தும், மகாராஜன்
ஒப்பரிய சத்தியமே உறுதியென்று கார்த்தான்.
பொறுமையினால் பொய்யன் என்று பூலோகம் வந்த
திறமைமிக்க முனியும் தான் செய்தவமு மீந்தார்;
அவமானமும் அடைந்தார். ஆதலினால் மைந்தீர்
உவமானம் ஆத்திச்சூடி உணர் ஔவியம் பேசேல்.

## 11. இயல்பலாதனசெய்யலாகாதென்பது.

சாயாதி என்னும் அரசன் வேட்டையாடச் செல்லும்பொழுது, சுகன்னி என்னும் தனது பெண்ணையும் அழைத்துக்கொண்டு சென்றான். வனத்தை அடைந்ததும் அவன் வேட்டையாட ஆரம்பித்தான். சுகன்னியும் இன்னும் சில பெண்களும் அவ்வனத்தின் அழகைப் பார்த்து வியந்து கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு இடத்தில் சௌனக ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார். அவர் தியானத்தில் இருந்ததால், இப்பெண்கள் வந்ததை அவர் அறியவில்லை. சுகன்னி அவர் அருகே சென்று, 'சுவாமி' என்று கூப்பிட்டும், அவர் பேசாததால், விளையாட்டாய் ஒரு குச்சியை எடுத்து அவர் கண்ணில் குத்தினாள். உடனே அம்முனிவர் தவமிழந்து, கோபமூண்டு, '...ங்கள் கண்ணிழக்கக் கடவீர்கள்' எனச் சபித்... உடனே அப்பெண்கள் பார்வை இழந்தவர்

களாய்த் துன்பமடைந்து, வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தனக்கு இயல்பலாத காரியத்தைச் செய்ததால் அவர்களுக்குக் கேடு நேரிட்டது. ஆதலால், இயல்பலாதன செயேல்.

மற்றுப்பற்றெனக்கின்றி—என்ற மெட்டு. [யால்

சுந்தர மிகுந் தாள்சுகன்னி யென்பாள் சாயாதி மன்தனையை
பந்தமற்றிடும் சௌநகர் தவம்பண்ணும் நல்வனமேவினர்.
தந்தையுமுடன் சென்றவன் வேட்டை தன்னிற்புக்கனன்.
பெண்கள் சேர்ந்
திந்த நல்வனத்தின் வளமதைக் காணவென்றெய்தினர்களே.
கண்டனர் ரிஷிதானும் நற்றவம் கண்கள் மூடிக் கருதுவ
தண்டையிற் சென்றழைத்தன ளளித்திலருரையாதலான்[ணில்
துண்டமாய் சிறுகுச்சி யொன்றை சுறுக்கென வெடுத்தேகண்
கெண்டைவாள் விழிகுத்தினள்;தவம் கெட்டதே;ரிஷிகோபமாய்
கண்ணிழக்கக் கடவதென்ன, சுகன்னியும் முடன் சேர்ந்தநற்
பெண்ணின் கூட்டமும் அந்தகர் ஆய் பேதுற்றார் மனம்.
[ஆதலால்
மண்ணில் நீதி இயல்பலாதசெயே லெனமிகு மாண்புடன்
புண்ணியம் பெறச் சொன்னவார்த்தையை ; போற்றுவீர் சிறு
பாலர்காள்.

## 12. கபட வார்த்தையைப் பேசக் கூடாதென்பது.

தேவேந்திரன் விசுவ உருவன் என்னும் ரிஷியை வரவழைத்து உபசரித்தனன். பின்பு அவன், 'சுவாமி, தேவர் வெற்றி பெறவும் அசுரர் தோல்வியடையவும் ஓர் யாகம் செய்து வைக்கவே

என்று வேண்டிக் கொண்டான். அதற்குச் சம் மதித்த குரு யாகமொன்றை ஆரம்பித்துச் செய் வித்தனர். அப்பொழுது தானும் ஓர் அசுரனாத லால், தன் குலத்தினர் தாழ்வதில் அவருக்கு விருப் பமில்லை. ஆகையால் தான் சொல்லும் மந்திரத்தை மாற்றி, அசுரர் வெற்றியடையுமாறு அவர் வஞ்சக மாய் ஜபித்தனர். இதைக் கண்ட தேவேந்திரன் கடுங்கோபங் கொண்டு, தம்முடைய கையிலிருந்த வச்சிராயுதத்தால் ஓங்கி ஒரு அடி அடித்தான். உடனே குருவின் தலை உடைந்து அவர் உயிர் துறந்தார். ஆதலால், வஞ்சகம் பேசேல்.

பத்தோன்பதாம் நூற்றுண்டின்—என்ற மெட்டு.

விச்சுவ உருவனென்னும் மேலானஒரு ரிஷியை பக்ஷமுட
னிந்திரனும் பாங்குடன் வரவழைத்தே,
'பண்ணிட ஓர் வேள்வி நானும் எண்ணினேன் ; நீர்
மேவி அசுரர் பங்கமுறக்கூவி சுரர்பலம்
பெறச் செய்தாலென்னாளும் பதைக்கா தென்னுவி'
என்றுரைக்க ரிஷியுமிசைந் தெண்ணமும் வேறுபட்டு,
குன்றிடவேசுரர் அசுரர் கூடிடவே பலமிகுந்தெனக்
கொண்டானே மந்த்ரம். அதைக் கண்டானே
இந்திரன்; மனம் விண்டானே; அந்தரம் புக்குவிசந்
தன்னால் அடித்து மனமும் குளிர்ந்தானே இந்திரன்.
வஞ்சகம்பேசே லெனும் வாக்கியத்தை மறந்தால்,
அஞ்சேலென் றுதரிக்க அன்புள்ள ஓர் துணையுமின்றி
...வுடைவீர் கஷ்டமே; அதனால் மிகவும் நஷ்டமே;
...த் தெரிவீரிஷ்டமே. ஆத்திச்சூடி நீதி யார்க்கும்
...வேட்டமே.

## 13. அதிக நித்திரை யாகா தேன்பது.

அத்தினபுரம் என்னும் நகரில் தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவர் அரசாண்டனர்; இவர்களே பாண்டவர்களெனப்படுவர். பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் பகையாதலின், துரியோதனன் ஐவரைக் கொல்லக் கருதி, ஓர் அரக்கு மாளிகையைக் கட்டுவித்தனன்; அதில் ஐவரை இருக்கும்படி கேட்டுக் கொண்டான். அம்மாளிகையின் கீழ் பூமியில் ஒரு அறை கட்டப்பட்டிருந்தது. அந்த இரகசியம் வீமனுக்குத் தெரியும். வீமன் எப்பொழுது தீ வைக்கப்படுமோ என்று பயந்து தூங்காமல் இருந்தான். திடீரென நடு ராத்திரியில் தீ வைக்கப்பட்டது. மற்ற நால்வரும் நன்றாய்த் தூங்கினார்கள். வீமன் மட்டும் எழுந்து, தூங்கிய நால்வரையும் ஒவ்வொருவராய்த் தூக்கிக்கொண்டு, அறையின் வழியே கொண்டுபோய், ஒரு தோட்டத்தில் விட்டுவிட்டான். மற்றவர்களைப் போல் வீமனும் தூங்கியிருந்தால் எல்லோரும் எரிந்து போயிருப்பார்கள். ஆதலால், அனந்த லாடேல்.

சந்தைக் கடையில்—என்ற மெட்டு.

அத்தினபுரம் தன்னில் ஆண்டார் ஐவர் பாண்டவர்கள்;
அவ்வுத்தமரு திட்டிர பீமார்ச்சுன நகுல சகாதேவர்.
பாண்டவருக்கும் துரியோதனர்க்கும் பகையும் ஆயிற்றே;
பகையால் அவரைக் கொல்ல நினைத்தான் பாவி அன்பர்(

துரிதமாய் அரக்கு மாளிகை யமைத்தான் துரியோதனன்
[தானும்;
அருமையாய் ஐவர்தமையும் அதிலே அனுப்பினன்; தீதானும்
தூங்கும்போது வைக்கத் துணிந்தே துரியோதனன் செய்தான்.
ஆங்கம்மாளிகை நடுவிலறை யொன்றமைந்ததைத் தானறியான்;
நித்திரைசெய்தார் நால்வரும்; அப்போ நெருப்பிடுவானென்றே
பத்திரமாய்த் தூங்காமல் பீமன் பார்த்திருந்தானன்றே.
அரசன் நெருப்பிட நடுராத்திரியில் அரக்குமாளிகையில்
விரைவுட னவரைத் தூக்கியவ்வறையில் விரைந்துகீழ்
[சென்றனனே.
நித்திரையின்றி விழித்திருந்த நிலைமையினால் பீமன்
அத்திறமே மற்றவரின் உயிரையும் ஆதரித்தானே;
ஆதலினால் அனந்த லாடேல் என்றாத்திச் சூடி
ஓதலினால் மைந்தரிது நல்லுறுதியென் றறிவீரே.

## 14. கீழ்மக்கள் கேண்மை கேடுதி பயக்குமென்பது.

அநுபமர் என்ற ரிஷி யிடத்தில் காட்டு மிருகங்கள் பயப்படாது வரும். அவரிடம் ஒரு நாய் சென்றது; அதற்கு அவர் உணவு இட்டுக் காப்பாற்றி வந்தார். அது கொழுத்துத் தற்பெருமை பாராட்டியது. அதனால் அந்த நாயின் உயிரைக் கவர மற்ற மிருகங்கள் யோசித்தன. முதலில் ஒரு பெரும் புலி சென்றது. நாய் பயந்து முனிவரிடம் சேர்ந்தது. அப்பொழுது அவர் அந்த நாயைப் புலியாக்கினார். காட்டுப் புலி பயந்து ஓடிற்று. ...த ஒரு யானைவந்தது. அதற்கும் நாய்ப்புலி ...ஈ முனிவரிடம் சென்றது. அவர் அதை

யானை யாக்கினர். காட்டானை பயந்தோடியது. பின்னர் ஒரு சிங்கம் சென்றது. நாய்-யானை அஞ்சி முனிவரை அடைந்தது. அவர் அப்பொழுது நாய்-யானையைச் சிங்கமாகச் செய்தனர். காட்டுச் சிங்கம் கதறிக்கொண்டு ஓடிற்று. முடிவில் சிங்கமாய் மாறிய நாய் ஒரு யோசனை செய்தது:

'இந்த ரிஷி பெருமை பெற்றவர். நானோ ஒரு நாய். என்னை இவர் சிங்கம் ஆக்கிவிட்டார். இது எனக்குச் செய்த பேருதவி ஆகும். இவர் கோபங் கொண்டால் என்னை என்ன செய்வாரோ? ஆகையால் இவர் உயிரை வாங்கி விடுவது நல்லது' என்று எண்ணி அது அவரிடம்சென்றது. இதன் கருத்தை அறிந்த முனிவர், 'என்ன வேண்டும்' நாயே?' என்று கேட்டார். உடனே அது முன்போல் நாய் ஆயிற்று. ஆதலால், கீழ்மை யகற்று.

வனத்திலுள்ள புல்லை மேய்ந்து—என்ற மெட்டு.

அரிய தவஞ் செய்துவந்தார் அநுபமர் என்றொருவர்.
சிறியஓர் நாய் அவரிடத்தில் சென்றததற்கன்பாய்
உணவுமிட்டுக் காப்பாற்றினர் உத்தமரும். அந்நாய்
கனமுமிட்டு உடல் கொழுத்து களிப்புடனே பெருமை
உடையதுவாய் வளர்வதை அங்குரிய மிருகங்கள்
அடைவுடனே கொல்லவழி அங்ஙனமே தேடி,
புலியொன்று செல்ல அஞ்சி முனிவரிடம் போக,
வலியுள்ள முனியும் அதை மாற்றினரே புலியாய்.
காட்டுப்புலி பயந்து செல்ல, கரிய யானை யொன்று
மீட்டுமதைக் கொல்லவர மேன்மையுள்ள முனியும்

நாய்ப்புலியை யானையாக்க நடந்ததே. காட்டானை
பின்னர் ஒரு சிங்கமதன் பேருயிரை வாங்க
மன்னர் வர நாயு மஞ்சி முனிவரிடம் போக,
அன்னவரும் நாய்-யானையை ஆக்கினரே சிங்கம்.
வனத்துச் சிங்கம் பயந்து வந்தவழி போக,
மனத்துக் கொடிய எண்ணம் வைத்ததே நாய்ச்சிங்கம்.
'நாயான நான்முதலில் நற்புலியும் ஆக்கி
கரியாக்கி சிங்கமாக கருணையுடன் செய்தார்.
கோபம் வந்தால் இவரும் என்ன கொடுமை யிழைப்பாரோ ?
வேகமுடன் சென்றிவரைக் கொன்றிடவே வேண்டும்'
என்றெண்ணி அருகில்வர இருந்தமுனி தெரிந்து
'நன்று நன்று என்னநாயே வேண்டு மென்ன '' நாயாய்
சென்றதுவே அச்சிங்கமும். தேர்வீரிங் நீதி
கீழ்மையகற்று என்று கீர்த்திபெற மேன்மேல்
வாழ்தல்பெற ஓதிவைத்த வாக்கியத்தை மைந்தீர்.

## 15. கேடுதியை ஒழித்தலே கீர்த்தியைப் பயக்குமேன்பது.

பத்மாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான் அவன் மிகக் கொடியவன்; தன்னை எதிர்த்தவரை ஒரே நொடியில் கொன்றுவிட ஆசை கொண்டனன். அதற்காக அவன் கடுந் தவம் செய்தான். பரமசிவன் அவனுக்குக் காட்சி கொடுத்தார்; கேட்கும் வரத்தைக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். அதற்கு அவன், ' நான் யார் தலையில் கையை வைத்தாலும், அவர் அப்பொழுதே ந்து சாம்பலாக வேண்டும்' என்ருன். அவன்

கேட்ட வரத்தை அவ்வாறே பரமசிவன் கொடுத் தருளினர். அசுரனும் மகிழ்ச்சி அடைந்தான். ஆனல் அவன் நன்றி இல்லாதவன். உடனே அவன் சிவன் தலையிலேயே கையை வைக்கச் சென்றான்; அவர் ஓடினர்; அவன் துரத்தினன்; கிட்ட நெருங்கவே சிவன் பயந்தார். அப்பொழுது விஷ்ணு அவருக்கு உதவி செய்ய நினைத்தனர். அவர் ஒரு பெண் உருவம் எடுத்து, அசுரன் முன்னே தோன்றினர். அப்பெண்ணின் மீது ஆசை கொண்டான் அசுரன். அதற்குப் பெண் ணுரு வெடுத்துவந்த விஷ்ணு 'நீ ஸ்நானம் செய்து வா' என்று கூறினர். அப்படியே அசுரன் ஸ்நானம் செய்து தலையைத் துவட்டினன். அவன் கை தன் தலையிலேயே பட்டது; வரமும் பலித் தது. உடனே அசுரன் எரிந்து சாம்பலாயினன். ஆதலால், கேடேப்பதோழி.

:

தில்லாம் திரி தில்லாம்—என்ற மெட்டு.

சிவனை நோக்கித் தபசுசெய்தான் திறல்சேர் பத்மாசுரன்.
அவனைநோக்கி அரனும் வந்தே 'அன்பா என்கேள் என்ன?'
'நான் யார்தலையில் கை வைத்தாலும் அப்போதவர் எரிய
தார்க்கொன்றையாய் சுவாமி வரம் தருவீரென்றே' தாழ்ந்தான்.
அப்படியே அளித்தேன் என்ன அசுரனும் என் செய்தான்;
என் சொற்படியே ஈந்ததுண்மையானல் 'சுவாமி, தங்க
'தலையின்மேலே கையை வைப்பேன்' என்றே தன்னை

கவலைகொண்டே சிவனும் ஓடக் கண்டாரே விஷ்ணுவும்.
பெண்ணுருவம் கொண்டார் கண்டான் பேதுற்றான்தன்னறிவு;
'கண்ணுக்கினியாளே எந்தன் கவலையை தீர்' என்றான்.
நீராடி வந்தாலே நன்மை என்றே பெண்ணும் நிகழ்த்த,
அசுரனும் அப்படியே குளித்து அவன் தலையைத் துவட்ட,
தன்கை தன்தலையிற் பட தானே சாம்பலானான்.
அன்பின்மிக்க மைந்தீரிந்த அருமைநீதி உணரும்.
கெடுப்பதொழி என்றே சொல்லக்கேட்டீர் ஆத்திச்சூடி
தடுப்பரிய பலனை நன்றாய்த் தானுணரும் மைந்தீர்.

## 16. சூது ஆடலாகா தென்பது.

நிடதம் என்னும் தேசத்தை நளன் என்னும் சக்கரவர்த்தி ஆண்டு வந்தான். அவன் நீதி தவறாது நடந்ததால் நாடெங்கும் செழித்திருந்தது. குடிகளும் அவனிடத்தில் அன்பு பாராட்டினர். அக்காலத்தில் புஷ்கரன் என்னும் ஒரு அரசன் நளனோடு சூதாட வந்தான். முதலில் நளனுக்குச் சூதாட மனமில்லை. பிறகு புஷ்கரன் சொல்லியதற்கு இணங்கி, அவன் சூதாடச் சம்மதித்தான். மந்திரி தடுத்தும் கேட்காமல், நளன் ஆட்டம் ஆட ஆரம்பித்தான். முதலில் நளன் ஜயித்தபோதிலும் ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் தோற்றான்; முடிவில் நாட்டையும் இழந்தான்; அதிகாரத்தையும் இழந்தான். மனைவி மக்களும் ...மே மீந்தனர். தனக்கு நேரிட்ட நிலையைக் ... நளன் துக்கங்கொண்டான். தனது பிள்ளை

களை மாமனார் ஊருக்கு அனுப்பிவிட்டு, அவன் தன் மனைவியோடு காட்டை யடைந்தான். அங்கும் அவன் மனைவியைப் பிரியலாயினன். முடிவில் அவன் மட்டும் மாறுவேஷம் பூண்டு காசி நகரத்திற்குச் சென்றனன். ஆங்கு அரசனிடத்தில் வேலையில் அமர்ந்தான். இவற்றிற்கு எல்லாம் காரணம் என்ன? சூதாடியது அல்லவோ? ஆதலால், சூது விரும்பேல்.

ஆனந்தக்களிப்பு—மெட்டு.

நிடதம் என்றொருதேசம் உண்டு; அதை
நீதியாய் ஆள்பவன் நளனென்போன் பண்டு.
குடிகளுக் கோர்குறை வில்லாமல் நீதி
கொண்டதனால் நாடுவளம் கண்டதுவே. மேனாள்
புஷ்கர னென்றொரு ராஜன் வந்தே நளனை
போதனையால் சூதாட மயக்கிவிட்டான். மந்திரி
தடுத்தார்கள் அவருரை கேளாமல் ஆட,
தன்நாடுநகர் யாவு மிழந்தான் தனியனானான்.
மாதுலன் நகர்செல்ல மக்கள் போக்கி,
மனைவியும் தானும் வனஞ்சென்றனனே நோக்கி.
காட்டினிலும் வெகு கஷ்டப்பட்டு தன்
காதலியையும் நீங்கி காசிநகர் சென்று,
துன்பமுடன் வேலை செயலானான். ஆதலால்,
சூதுவிரும்பே லெனுநீதி யுணர்வீரே.

TB
O-32
N28

---

Printed at the B. N. Press, Mount Road, Mad

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்